**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.390/2022 |
| Prosecution Witness | : | அ.சா.4 |
| Name | : | சுதா |
| Father's/Husband Name: | : | அன்புராஜ் |
| Address : | : | மெயின் ரோடு, வடக்கு தெரு, கோவில்பாளையம், பெரம்பலூர் |
| Age | : | 47/2023 |

**தேதி: 01/11/2023**

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது( **எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கைரேகை என்னுடையது தான். தேதி மாதம் நினைவில்லை. நான் கடந்த ஆண்டு ஒரு நாள் காலை 11.00 மணியளவில் கோவில்பாளையத்திலிருந்து கீழமாத்தூர் செல்வதற்கு வேட்டக்குடியில் பஸ் ஏறுவதற்கு வந்தேன். அப்போது ஜெய்சங்கர் கடையில் கூட்டமாக இருந்தது. அதனால் நானும் சென்று பார்த்தேன். அப்போது போலீசார் சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டனர். அதனால் நான் எனது கைரேகையை

இட்டேன். கண்ணன் என்பவரையும் அப்போது விசாரித்தனர். ஆனால் அவர் போலீசாரிடம் என்ன கூறினார் என எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் கோவில்பாளையம். கோவில்பாளையத்தில் பேருந்து நின்று செல்லும் என்றால் சரிதான். அங்கிருந்து தான் நான் வழக்கமாக செல்வேன் என்றால் சரியல்ல. ஏனென்றால் வேட்டக்குடியிலிருந்து செல்வேன். போலீசார் என்னை விசாரித்த போது நான் எங்கு குடியிருக்கிறேன் என்ற விவரத்தை கூறினேனா என்றால் ஆமாம். போலீசார் என்னை விசாரணை செய்த தேதியில் நான் 11.30 மணிக்கு பஸ் ஸ்டாப் சென்றேன். ஜெய்சங்கர் கடைக்கும் பஸ் ஸ்டாப்பிற்கும் ஒரு மைல் தூரம் இருக்கும். இந்த வழக்கை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், உண்மையிலேயே என்னை விசாரித்திருந்தால் நான் எங்கு குடியிருக்கிறேன் என்ற விவரத்தை கூறியிருப்பேன் என்றாலும், சரியல்ல. இளஞ்செழியனும் நானும் உறவினர் என்றால் சரிதான். இளஞ்செழியன் ஜெய்சங்கருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கும் படி என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. போலீசார் அங்கு வந்து நான் சாட்சியம் அளித்த படி விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெய்சங்கருக்கு ஆதரவாக

CWP-DJ

இளஞ்செழியன் சாட்சியம் அளிக்கும் படி கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

JM-I, Pblr

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.390/2022 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | இளஞ்செழியன் |
| Father's/Husband Name: | : | சண்முகம் |
| Address : | : | நடுத்தெரு, கோவில்பாளையம், பெரம்பலூர் |
| Age | : | 43/2023 |

**தேதி: 01/11/2023**

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது( **எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இருசக்கர வாகனங்களை பழுது பார்க்கும் மெக்கானிக்காவும், சென்ட்ரல் டூவிலர் மெக்கானிக் என்ற பெயரில் வேட்டக்குடியில் தொழில் நடத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ஜெய்சங்கர் என்பவர் இருசக்கர வாகனங்களின் ஸ்பேர் பார்ட்ஸ் சம்மந்தமான பொருட்களை விற்பனை செய்வார். அதனால் நான் ஜெய்சங்கர் என்பவரது கடைக்கு 13/07/2022 அன்று காலை 10.00-11.00 மணியளவில் நான் சென்றிருந்த போது குற்றப்பிரிவு போலீசார் அங்கு வந்து விசாரணை செய்து படம்

வரைந்து எழுதி கொண்டனர் அதில் நானும் மணிவாசகம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஜெய்சங்கர் எனக்கு உறவு முறை கிடையாது. அப்படியானால் வழக்கை பற்றி எவ்வாறு தெரியும் என்றால் நான் வழக்கமாக அவரது கடையில் பொருட்கள் வாங்குவதால் எனக்கு தெரியும். அவர் நண்பர் என்றால் சரிதான். நான் அந்த கடையில் கடனுக்கு பொருட்களை வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்த படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டுவிட்டு புகார்தாரர் எனக்கு நண்பர் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பமிட்டதாக போலீசார் கேட்டுக்கொண்டற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நண்பருக்கு சாதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

Judicial